# 10

# நியாயத்தீர்ப்பு

*“மரித்தோராகிய சிறியோரையும் பெரியோரையும் தேவனுக்கு முன்பாக நிற்கக் கண்டேன், அப்பொழுது புஸ்தகங்கள் திறக்கப்பட்டன, ஜீவபுஸ்தகம் என்னும் வேறொரு புஸ்தகமும் திறக்கப்பட்டது, அப்பொழுது அந்தப் புஸ்தகங்களில் எழுதப்பட்டவைகளின்படியே மரித்தோர் தங்கள் தங்கள் கிரியைகளுக்குத்தக்கதாக நியாயத்தீர்ப்படைந்தார்கள். சமுத்திரம் தன்னிலுள்ள மரித்தோரை ஒப்புவித்தது, மரணமும் பாதாளமும் தங்களிலுள்ள மரித்தோரை ஒப்புவித்தன. யாவரும் தங்கள் தங்கள் கிரியைகளின்படியே நியாயத்தீர்ப்படைந்தார்கள்” (வெளி. 20:12, 13).*

மரணத்தின்போது ஆத்துமாவும் ஆவியும் சரீரத்திலிருந்து பிரிந்து சென்று பாதாளத்தில் பின்வரும் இரு இடங்களில் ஏதாவதொன்றிற்கு எடுத்துச் செல்லப்படும்: பரதீசில் இளைப்பாறுதல் மற்றும் ஆறுதலுக்கு (லூக். 23:43; 2 கொரி. 12:4; வெளி. 2:7) அல்லது வேதனையுள்ள இடத்தில்[1] வேதனைக்கு (2 பேது. 2:4). உடலானது அநேகமாகக் கல்லறைக்குள் புதைக்கப்படும். ஒரு நாளிலே இயேசு, மரித்தவர்களின் உடல்களை உயிர்ப்பித்து மரித்திருப்பவர்களை உயிருடன் இருப்பவர்களுடன் ஒன்றுகூட்டி தமக்கு முன் நியாயத்தீர்ப்பு அடையும்படி நிறுத்துவதற்காகத் திரும்பி வருவார். இது இந்தக் காலத்தின் முடிவில் நடைபெறும் அறுப்பின் காலத்தில் நடப்பதாயிருக்கும் (மத். 13:39).

மனித குல வரலாறு முழுவதிலும் தேவன், பல்வேறு மக்களை, குழுக்களை மற்றும் நாடுகளைத் தண்டித்துள்ளார்.[2] இது, அவர் மனிதனின் செயல் ஒவ்வொன்றையும் நியாயத்தீர்ப்புக்குக் கொண்டு வருவார் என்பதற்கான ஒரு எச்சரிக்கையாக இருக்க வேண்டும். ஒவ்வொரு செயலும் இந்த வாழ்வில் பலனளிக்க அல்லது தண்டிக்கப்படுவதில்லை, ஆனால் நித்தியத்தில் தேவன் ஒவ்வொரு செயலையும் நியாயந்தீர்த்து எல்லாக் கணக்குகளையும் தீர்த்து வைப்பார். நியாயத்தீர்ப்பின் நாள் என்பது “கடைசி நாள்” (யோவா. 12:48), “கோபாக்கினையின் நாள்” (ரோமர் 2:5), “கிறிஸ்துவின் நாள்” (பிலி. 1:6, 10), “அந்த நாள்” (2 தெச. 1:10), “நியமிக்கப்பட்ட நாள்” (அப். 17:31), “நியாயத்தீர்ப்பின் நாள்” (1 யோவா. 4:17) மற்றும் “மகா நாள்” (யூதா 6) என்றெல்லாம் அழைக்கப்படுகிறது.

இது “கர்த்தருடைய[3] நாள்” என்று அழைக்கப்படுவதில்லை, ஏனெனில் வெளி. 1:10ல் “கர்த்தருடைய நாள்” என்பது ஞாயிற்றுக்கிழமையாக உள்ளது. இது சிலர் செய்துள்ளதுபோல் நியாயத்தீர்ப்பு நாள் என்று எண்ணிக் குழப்பம் அடையக்கூடாது:

[*“கர்த்தருடைய நாளில்”; வெளி. 1:10*] *என்பது பழைய ஏற்பாடு மற்றும் புதிய ஏற்பாடு ஆகிய பிரிவுகளில் நியாயத்தீர்ப்பு நாளுக்கு மீண்டும் மீண்டும் பயன்படுத்தப்பட்டுள்ள பதில் குறிப்புப் பெயராக உள்ளது என்று சிலர் விவாதம் செய்திருப்பினும் .... இது ஞாயிற்றுக்கிழமையைக் குறிக்கிறது என்றே பல கல்வியாளர்கள் முடிவுசெய்துள்ளனர் .... இந்த முடிவு தொடக்க காலத்தில் மறைச் சட்டப்படியல்லாத கிறிஸ்தவ எழுத்துக்களில்* [*உதாரணமாக: Didache* 14:1; Ignatius, *Magnesians* 9:1; Clement of Alexandria, *Stromata* 7:12; Tertullian, *On Idolatry, ch.* 14] *“கர்த்தருடைய நாள்” என்று அடிக்கடி பயன்படுத்தப்படுகின்ற செயலினால், ஞாயிற்றுக்கிழமையைக் குறிக்கிறது என்றே நிலைநாட்டப்பட்டுள்ளது.*[4]

## இதன் காலம்

*இயேசு மீண்டும் வரும்போது நியாயத்தீர்ப்பு நடைபெறும் (மத். 25:31-33; வெளி. 20:11, 12). இது எப்போது நடைபெறும் என்பதைப் பிதா மாத்திரமே அறிவார் என்று இயேசு கூறினார் (மத். 24:36), இது வரவிருக்கும் நியாயத்தீர்ப்பின் நாள் எப்போது என்பதைப் பூமியில் உள்ள எவரொருவரும் அறியமாட்டார்கள் என்று அர்த்தப்படுத்துகிறது.*

## இதன் உறுதிப்பாடு

*தேவன் எப்போது நியாயந்தீர்ப்பார் என்பது, அவர் நியாயந்தீர்ப்பார் என்பதைப் போல் அவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்ததாக இருப்பதில்லை. வேதாகமம், “ஒவ்வொரு கிரியையையும், அந்தரங்கமான ஒவ்வொரு காரியத்தையும், நன்மையானாலும் தீமையானாலும், தேவன் நியாயத்திலே கொண்டு வருவார்” என்று எச்சரிக்கை செய்கிறது (பிர. 12:14).*

*தேவன் நியமித்துள்ள நாளில், அவர் உலகத்தை நியாயந்தீர்ப்பார், இதை அவர் இயேசுவை மரித்தோரிலிருந்து எழுப்பியிருப்பதன் மூலம் உறுதிப்படுத்தியுள்ளார் (அப். 17:31). நியாயத்தீர்ப்பு என்பது ஒவ்வொருவரும் காத்துக்கொள்ள வேண்டிய ஒரு நியமனமாக உள்ளது. பவுல், “ஏனென்றால், சரீரத்தில் அவனவன் செய்த நன்மைக்காவது தீமைக்காவது தக்க பலனை அடையும்படிக்கு நாமெல்லாரும் கிறிஸ்துவின் நியாயாசனத்திற்கு முன்பாக வெளிப்பட வேண்டும்” என்று அறிவித்தார் (2 கொரி. 5:10).*

## இதன் நிகழ்ச்சிகள்

*அந்த நினைவுகூரத்தக்க நியாயத்தீர்ப்பின் நாளில், மனித குலம் முழுமையும் நியாயந்தீர்க்கப்படும்:*

*(1) இயேசு தமது மகிமையுடனும் தூதர்களுடனும் (மத். 25:31) ஜுவாலித்து எரிகிற அக்கினியோடும் (2 தெச. 1:8) பரலோகத்திலிருந்து இறங்கி வந்து, தமது நியாயாசனமாகிய மகிமையுள்ள ஆசனத்தில் அமருவார் (மத். 25:31, 32; 2 கொரி. 5:10; வெளி. 20:11ஐக் காணவும்).*

*(2) மரணமும் பாதாளமும் தங்களில் உள்ள மரித்தோரை ஒப்புக்*

*கொடுக்கும் (வெளி. 20:13).*

*(3) உயிர்ப்பிக்கப்பட்ட மற்றும் பூமியில் உயிருடன் இருக்கும் நாம் யாவரும் நியாயந்தீர்க்கப்படுவதற்காக (அப். 10:42; 2 தீமோ. 4:1) இயேசுவின் முன்பாக நிற்கும்படிக்கு (2 கொரி. 5:10; வெளி. 20:12), தூதர்களால் ஒன்றுகூட்டப்படுவோம் (மத். 13:39).*

*(4) வானமும் பூமியும் அழிக்கப்படும் (வெளி. 20:11; 2 பேது. 3:7-12).*

*(5) புத்தகங்கள் திறக்கப்படும் (வெளி. 20:12).*

*(6) புத்தங்களில் எழுதியுள்ளவற்றின்படி, நமது கிரியைகளுக்குத் தக்கதாக நாம் நியாயந்தீர்க்கப்படுவோம் (யோவா. 12:48; வெளி. 20:13).*

*(7) முதலில் நீதிமான்கள் நியாயந்தீர்க்கப்படுவார்கள் (மத். 25:34-40; 1 பேது. 4:17).*

*(8) பின்பு துன்மார்க்கர் நியாயந்தீர்க்கப்படுவார்கள் (மத். 25:41-46).*

*(9) இயேசு தமது பதிவேடுகளை நம்முடன் மறுகண்ணோட்டமிட்டு தமது நியாயத்தீர்ப்பின் சரியான தன்மையை நமக்குக் காண்பிப்பார் (மத். 25:34-46).*

*(10) நம் ஒவ்வொருவருக்கும் நமது நித்திய அடைவிடம் விதிக்கப்படும் (மத். 25:34-46).*

## இதன் காட்சிமைவு

*தேவன் நியாயந்தீர்ப்பார் (சங். 96:10; பிர. 12:14; ரோமர் 2:3; 14:12; 1 கொரி. 5:13; எபி. 12:23ஐக் காணவும்) என்றும், ஒரே ஒரு நியாயாதிபதி இருப்பார் (யாக். 4:12) என்றும் வேதாகமம் உறுதியாக எடுத்து உரைக்கிறது. "தேவன்" என்ற குறிப்புப் பெயர் குமாரனுக்கும் பிதாவுக்கும் நடைமுறைப் படுத்தப்படக் கூடும் என்பதால் (யோவா. 1:1, 2), "தேவன் நியாயந் தீர்ப்பாரா?" என்பதல்ல ஆனால், "நியாயாதிபதியாக இருப்பது பிதாவா அல்லது குமாரனா?" என்பதே கேள்வியாக உள்ளது.*

*பிதாவானவர் நியாயத்தீர்ப்புச் செய்வதில் உள்ளடங்கியிருப்பினும், அவர் தமது குமாரனாகிய இயேசுவின் மூலமாகவே அதைச் செய்வார் (அப். 17:31; ரோமர் 2:16); ஆகையால், "பிதாவானவர் தாமே ஒருவருக்கும் நியாயத்தீர்ப்புச் செய்யாமல், நியாயத்தீர்ப்புச் செய்யும் அதிகாரம் முழுவதையும் குமாரனுக்கு ஒப்புக்கொடுத்திருக்கிறார்" (யோவா. 5:22) என்று கூறப்படக்கூடும். இந்த சத்தியத்துடன் புதிய ஏற்பாட்டின் பிற வசனப்பகுதிகளும் கருத்து ஒருமித்துள்ளன.[5] தேவனுடைய நியாயாசனமும் கிறிஸ்துவினுடைய நியாயாசனமும் ஒன்றாகவே இருக்க வேண்டும் (ரோமர் 14:10; 2 கொரி. 5:10).*

*நியாயத்தீர்ப்பின் காட்சியில் சிலர் சித்தரித்துள்ளபடி, இயேசு நமது தற்காப்புவாத வழக்கறிஞராயிருக்க, பிதாவானவர் நியாயாசனத்தில் வீற்றிருப்பவராகக் காணப்படமாட்டார். இயேசு அந்தப் பணித்தகுதியில் தற்போது செயல்பட்டுக் கொண்டிருக்கின்றார் (1 யோவா. 2:1, 2). நியாயத் தீர்ப்பின் நாளில் இயேசு நியாயாதிபதியாகத் தமது நியாயாசனமான சிங்காசனத்தில் வீற்றிருந்து (மத். 25:31, 32; 2 கொரி. 5:10) எல்லா*

*மக்களையும் நியாயந்தீர்ப்பார்.*

*உலகத்தை நியாயந்தீர்ப்பதில் மற்றவர்களின் ஈடுபாடு பற்றிச் சில கேள்விகள் எழுகின்றன. முதலாவது, அப்போஸ்தலர்கள் இஸ்ரவேலின் பன்னிரு கோத்திரங்களையும் நியாயந்தீர்ப்பார்கள் என்று இயேசு கூறினார் (மத். 19:28). அவர்கள் இந்த நியாயந்தீர்த்தலை எப்போது செய்வார்கள்? அவர்கள் இஸ்ரவேலின் வரலாற்றினுடைய தொடக்க காலத்தில் நியாயாதிபதிகள் செய்ததுபோன்ற வகையில் (நியா. 2:16), ஆவிக்குரிய கருத்தமைவில் தற்போதைய காலத்தில் நியாயந்தீர்த்துக் கொண்டிருக்கின்றனரா? அல்லது அவர்கள் காலத்தின் முடிவில் நியாயந்தீர்ப்பார்களா?*

*இரண்டாவது, பரிசுத்தவான்கள் உலகத்தையும் தூதர்களையும் நியாயந்தீர்ப்பார்கள் (1 கொரி. 6:2, 3). அவர்கள், நோவா தன் காலத்து உலகத்தை ஆக்கினைக்குள்ளாகத் தீர்த்தது போன்ற அதே வகையில் தேவனுக்குத் தங்களின் கீழ்ப்படிதலினால் இவர்களை நியாயந்தீர்க்கின்றனரா? அல்லது அவர்கள் நியாயத்தீர்ப்பில் இயேசுவுடன் வழக்கறிஞர்களாக அமர்ந்து தங்கள் தீர்ப்பை வெளியிடுவார்களா?*

*மூன்றாவது, இரத்த சாட்சிகளாக மரித்த பரிசுத்தவான்கள் சிங்காசனங்களில் வீற்றிருப்பதாக விவரிக்கப்படுகின்றனர். வெளி. 20:4, "நியாயத்தீர்ப்புக் கொடுக்கும்படி அவர்களுக்கு அதிகாரம் அளிக்கப்பட்டது" என்று கூறுகின்றது. இது நேரடியான அர்த்தத்தில் எடுத்துக் கொள்ளப்பட வேண்டுமா? இந்த நியாயத்தீர்ப்பு, காலத்தின் முடிவில் நடைபெறுமா? அவர்களின் நியாயத்தீர்ப்பு "ஆயிரம் ஆண்டு அரசாட்சி" முழுவதிலும் நடைமுறையில் இருக்குமா? அவர்களின் நியாயத்தீர்ப்பு அவர்களின் செய்திகளில் காணப்படுமா அல்லது அவர்கள் கடைசி நாளில் நியாயந்தீர்ப்பதற்குக் கிறிஸ்துவுடன் அமருவார்களா?*

*யாக்கோபு, ஒரே நியாயாதிபதிதான் இருக்கின்றார் (யாக். 4:12). அவர் நியாயப்பிரமாணத்தைக் கட்டளையிடுகிறவர் என்று உரைத்தார், இது இயேசுவைத் தவிர மற்ற யாவரையும் நியாயாதிபதியாய் இராதபடிக்கு நீக்கிப்போடுகிறது. இந்தக் காரணத்தினால், மேற்குறிப்பிட்ட வசனப்பகுதிகள், மற்றவர்கள் வாழ்வின் ஒப்பீடுகளில் நியாயந்தீர்ப்பார்கள் என்று அர்த்தப்படுவதாக விளக்கப்பட வேண்டும். இயேசுவின் கூற்றான, "யோனாவின் பிரசங்கத்தைக் கேட்டு நினிவே பட்டணத்தார் மனந்திரும்பினார்கள். இதோ, யோனாவிலும் பெரியவர் இங்கே இருக்கிறார். ஆதலால் நியாயத்தீர்ப்பு நாளிலே நினிவே பட்டணத்தார் இந்தச் சந்ததியாரோடெழுந்து நின்று இவர்கள்மேல் குற்றஞ்சுமத்துவார்கள்" (மத். 12:41) என்பது ஒரு நல்ல விளக்கமாக இருக்க முடியும்.*

## இதன் தரஅளவை

*நமது வாழ்வுகளை இயேசு எந்தத் தர அளவையினால் அளவிடுவார்? வெளி. 20:12, "மரித்தோராகிய சிறியோரையும் பெரியோரையும் தேவனுக்கு முன்பாக நிற்கக் கண்டேன், அப்பொழுது புஸ்தகங்கள் திறக்கப்பட்டன, ஜீவபுஸ்தகம் என்னும் வேறொரு புஸ்தகமும் திறக்கப்பட்டது,*

அப்பொழுது அந்தப் புஸ்தகங்களில் எழுதப்பட்டவைகளின்படியே மரித்தோர் தங்கள் கிரியைகளுக்குத்தக்கதாக நியாயத்தீர்ப்படைந்தார்கள்" என்று கூறுகிறது. இந்தப் புத்தகங்கள் எனப்படுபவை, வேதாகமத்தின் புத்தகங்களாக இருக்கக் கூடும். ரோமர் 2:16ல் பவுல், சுவிசேஷமே நமக்கு விதிக்கப்படும் நியாயத்தீர்ப்புக்கு அடிப்படையாக இருக்கும் என்று கூறியிருக்கலாம்; இருப்பினும், அவ்வசனம் "என் சுவிசேஷத்தின்படியே, தேவன் இயேசு கிறிஸ்துவைக் கொண்டு மனுஷருடைய அந்தரங்கங்களைக் குறித்து நியாயத்தீர்ப்புக் கொடுக்கும் நாளிலே இது விளங்கும்" என்றுள்ளது, இன்னும் சிறப்பாக மொழிபெயர்க்கப்பட்டதாக உள்ளது.

இயேசுவின் கூற்று ஒன்று, கிறிஸ்தவ யுகத்தில் உள்ள ஒவ்வொருவரும் எந்தத் தர அளவையின்படி நியாயந்தீர்க்கப்படுவார்கள் என்ற விஷயத்தை முடிவு செய்கிறது. அவர், "என்னைத் தள்ளி என் வார்த்தைகளை ஏற்றுக் கொள்ளாதவனை நியாயந்தீர்க்கிறதொன்றிருக்கிறது, நான் சொன்ன வசனமே அவனைக் கடைசி நாளில் நியாயந்தீர்க்கும்" என்று கூறினார் (யோவா. 12:48-50).

கிறிஸ்தவ யுகத்திற்கு முன்பு வாழ்ந்தவர்கள் இன்னொரு தர அளவையின்படி நியாயந்தீர்க்கப்படுவார்கள். பவுல், "எவர்கள் நியாயப்பிரமாணமில்லாமல் பாவஞ் செய்கிறார்களோ, அவர்கள் நியாயப்பிரமாணமில்லாமல் கெட்டுப்போவார்கள், எவர்கள் நியாயப்பிரமாணத்துக்குட்பட்டவர்களாய்ப் பாவஞ் செய்கிறார்களோ, அவர்கள் நியாயப்பிரமாணத்தினாலே ஆக்கினைத் தீர்ப்படைவார்கள். நியாயப்பிரமாணத்தைக் கேட்கிறவர்கள் தேவனுக்கு முன்பாக நீதிமான்களல்ல, நியாயப்பிரமாணத்தின்படி செய்கிறவர்களே நீதிமான்களாக்கப்படுவார்கள்" என்று எழுதினார் (ரோமர் 2:12, 13). ஒருவருக்கு விதிக்கப்படும் நியாயத்தீர்ப்பு அவர் வாழ்ந்த காலகட்டத்தில் தேவன் விதித்த நிபந்தனைகளின் அடிப்படையிலேயே அமையும்.

நாம் நமது சரீரத்தில் செய்தவைகளுக்கு, இயேசுவின் வசனத்தின்படியாக நியாயந்தீர்க்கப்படுதல் என்பதே இந்தக் காலகட்டத்தில் நாம் நியாயந்தீர்க்கப்படும் அளவுகோலாக உள்ளது (2 கொரி. 5:10). இது நாம் செய்துள்ள மறைவான செயல்கள் (ரோமர் 2:16), நாம் பிறரை எப்படி நியாயந்தீர்க்கின்றோம் (மத். 7:1, 2; யாக். 2:13), நமது வார்த்தைகள் (மத். 12:36, 37), நமது கிரியைகள் மற்றும் செய்கைகள் (மத். 16:27; ரோமர் 2:6; 1 பேது. 1:17), மற்றும் நமது இருதயத்தின் யோசனைகள் (1 கொரி. 4:5) ஆகியவற்றை உள்ளடக்குகிறது.

இயேசுவின் இரத்தத்தினால் சுத்திகரிக்கப்பட்டுள்ள (ரோமர் 3:25; அப். 2:38) நிலையில் நாம், அவரது இரத்தத்தினால் நமது பாவங்கள் கழுவப்பட்டிருக்கக் கூடியவர்களாய் இருக்கின்றோம் (அப். 22:16; வெளி. 1:6) என்பது நற்செய்தியாக உள்ளது. நமக்கு எதிராக எந்தப் பாவமும் நம்மீது குற்றமாகச் சுமத்தப்படாது என்ற நிலையில் நாம் அவருக்கு முன்பாக, "பரிசுத்தராகவும் குற்றமற்றவர்களாகவும் கண்டிக்கப்படாதவர்களாகவும்" நிற்க முடியும் (கொலோ. 1:21). நமது தவறுகள் இயேசுவினால் திருத்தப்பட்டுள்ளன. விஷயம் இப்படியிருக்கிறது என்றால், தேவன் இனியும் நமது

*பாவங்களை நினைக்க மாட்டார் (எபி. 8:12), எனவே அவர் அவற்றை நியாயத்தீர்ப்பின் நாளில் நமக்கெதிராகக் கொண்டு வரமாட்டார்.*

*அந்த நாளில் தேவன் எவ்விதமான பிரியமானவர்களையும் கொண்டிருக்க மாட்டார். அவர் பட்சபாதமின்றி பாரபட்சம் எதுவுமின்றி நியாயந்தீர்ப்பார் (ரோமர் 2:11; 1 பேது. 1:17). நாம் அவரை மதித்து, அவரது சித்தத்தின்படி வாழ்ந்தோம் என்றால் (மத். 7:21), அவர் நம்மை ஏற்றுக்கொள்வார்; ஆனால் நாம் அவரைப் பின்பற்றாதிருந்தோம் என்றால், அவர் நம்மைப் புறக்கணிப்பார்.*

*நியாயத்தீர்ப்பு என்பது நீதி மற்றும் பரிசுத்தம் ஆகியவற்றின் அடிப் படையில் இருக்கும் என்பதால் (அப். 17:31), தேவனுடைய சுய பரிசுத்தமே அவரது தர அளவையாக இருக்கும் (1 பேது. 1:15, 16). இதனால்தான் நாம் இயேசுவைப்போன்று வளர வேண்டியவர்களாயும் (எபே. 4:13), அவரை நமது வாழ்க்கைக்கு மாதிரியாகக் கொண்டிருக்க வேண்டியவர்களாயும் (1 யோவா. 2:6) இருக்கிறோம். நாம் இந்த உலகில் அவரைப் போல் இருந்தால், நாம் நியாயத்தீர்ப்பு நாளில் தைரியமுள்ளவர்களாய் இருக்க முடியும் (1 யோவா. 4:17).*

*நம்மைப் பற்றிய தேவனின் முழுமையான அறிவின் அடிப்படையில் (எபி. 4:13), அவர் உள்ளரங்கமாக அல்லது வெளியரங்கமாக உள்ள ஒவ்வொரு செயலையும் (பிர.12:14) கண்டிப்புடனும் உறுதியுடனும் நியாயந்தீர்ப்பார். பிறருக்கு இரக்கம் காண்பித்திருந்தவர்களுக்கு அவரும் இரக்கம் காண்பிப்பார்; இருப்பினும், "இரக்கஞ் செய்யாதவனுக்கு இரக்க மில்லாத நியாயத்தீர்ப்புக் கிடைக்கும்" (மத். 5:7; யாக். 2:13).*

*மாபெரும் முக்கியத்துவம் கொண்ட பெரிய வாய்ப்புகள் அல்லது பணிநிலைகள் தரப்பட்டுள்ளவர்கள் மாபெரும் கண்டிப்புடன் நியாயந் தீர்க்கப்படுவார்கள். நாம் பெற்றுக் கொண்டுள்ளவற்றின்படி நாம் ஊழியம் செய்யவேண்டும் என்று தேவன் எதிர்பார்ப்பதையும், அவர் அதன்படியே நியாயந்தீர்ப்பார் என்பதையும் தாலந்துகளின் உவமை நமக்கு விவரிக்கிறது (மத். 25:14-30). இந்த உவமையில் நிலைநாட்டப்பட்டுள்ள கொள்கை பின்வருமாறு உரைக்கப்பட முடியும்: "அறியாதவனாயிருந்து, அடிகளுக்கு ஏதுவானவைகளைச் செய்தவனோ, சில அடிகள் அடிக்கப்படுவான். எவனிடத்தில் அதிகங் கொடுக்கப்படுகிறதோ அவனிடத்தில் அதிகங் கேட்கப்படும், மனுஷர் எவனிடத்தில் அதிகமாய் ஒப்புவிக்கிறார்களோ அவனிடத்தில் அதிகமாய்க் கேட்பார்கள்" (லூக். 12:48). தேவனுடைய வசனத்தைப் போதிப்பவர்கள் மிகவும் பொறுப்புள்ள பணிநிலையில் இருக்கின்றனர். இதனால் தான் தேவன், ''என் சகோதரரே, அதிக ஆக்கினையை அடைவோம் என்று அறிந்து, உங்களில் அநேகர் போதகராகா திருப்பீர்களாக" என்று எச்சரிக்கின்றார் (யாக். 3:1). தேவனுடைய நியாயத் தீர்ப்பானது வாய்ப்பு மற்றும் திறன் ஆகியவற்றின் அடிப்படையில் அமைந்திருக்கும்.*

*நியாயத்தீர்ப்பு இறுதியானதாக இருக்கும் (மத். 25:31-46); எனவே, தேவனுடன் விவாதம் செய்வதற்கான எந்த முயற்சியும் வீணானதாக இருக்கும். தங்கள் கீழ்ப்படியாமையுள்ள வாழ்க்கையை நியாயப்படுத்த*

நாடுகின்றவர்களிடத்தில் இயேசு, "அக்கிரமச் செய்கைக்காரரே, என்னை விட்டு அகன்றுபோங்கள்" என்று கூறுவார் (மத். 7:21-23).

தேவன் ஒவ்வொரு நபரின் வாழ்வையும் மறுகண்ணோட்டமிடுவதற்கு முன்பாகவே, ஒவ்வொருவருக்கும் விதிக்கப்படவிருக்கும் தீர்ப்பைப் பற்றி அறிந்துள்ளார். தேவன் தம்முடையவர்கள் இன்னார் என்பதை (2 தீமோ. 2:19; யோவா. 10:14, 27) நீண்ட காலமாக அறிந்துள்ளது போலவே (மத். 25:34), தற்போதும் அறிந்திருக்கின்றார். துன்மார்க்கருக்கான நியாயத் தீர்ப்பை அவர் நீண்ட காலத்திற்கு முன்பாகவே திட்டமிட்டார் (2 பேது. 2:3). நியாயத்தீர்ப்பின் நாள் என்பது இயேசு தமது தலையைச் சொறிந்து கொண்டு, பின்பு யாரெல்லாம் பரலோகம் செல்ல வேண்டும் மற்றும் யாரெல்லாம் நரகம் செல்ல வேண்டும் என்று தமது மனதில் தீர்மானிக்கும் வேளையாக இராது. யார் எங்கு செல்வார்கள் என்பதை அவர் ஏற்கனவே அறிந்துள்ளார். நியாயத்தீர்ப்பின் நாளில் அவர் நம்முடன் சேர்ந்து நமது வாழ்வைக் கண்ணோக்கி, நமக்குத் தரவிருக்கும் தீர்ப்பின் நீதியுள்ள தன்மை பற்றி நாம் புரிந்துகொள்ளக்கூடிய வகையில் விளக்கப்படுத்தி, பின்பு நமக்கு விதிக்கப்படும் தீர்ப்பை அறிவிப்பார்.

## இதன் செயல் பரப்பு

"எல்லாரும்" நியாயந்தீர்க்கப்படுவார்கள் என்று வேதாகமம் தவறற்ற வகையில் அறிவிக்கிறது (யூதா. 14). மரித்த எல்லாருடைய உடல்களும் உயிர்ப்பிக்கப்படாவிட்டால் இது நடைபெற முடியாது. தேவன் எல்லா மக்களையும் நியாயந்தீர்க்கத் திட்டமிட்டுள்ளார் என்பதற்கு, இயேசுவின் உயிர்த்தெழுதல் என்பது அவருடைய நிரூபணமாக உள்ளது (அப். 17:31). நியாயந்தீர்க்கப்படும்படிக்கு (2 கொரி. 5:10; 1 பேது. 4:4, 5; 2 பேது. 2:9), துன்மார்க்கம் நீதிமான்களும் உயிர்ப்பிக்கப்படுவார்கள் (யோவா. 5:28, 29; அப். 24:15). இது எல்லா நாடுகளிலும் உள்ள நல்ல மற்றும் மோசமான யாவரையும் (மத். 25:31-46), மரித்த நீதிமான்கள் மற்றும் துன்மார்க்கர் யாவரையும் (வெளி. 20:11-15), மற்றும் ஒருவேளை தூதர்களையும்கூட (1 கொரி. 6:3; 2 பேது. 2:4) உள்ளடக்கும். பிசாசும் அவனது தூதர்களும் நியாயந்தீர்ப்புக்கு விசாரணை ஒன்றைக் கொண்டிராதிருக்கலாம். தேவன் அவர்களுடன் அவர்களின் பதிவேடுகளைப் பார்வையிட்டு அவர்களைத் தண்டிப்பதில் தமது நீதியுள்ள நியாயத்தீர்ப்பைக் காண்பிக்கத் தேவை யிருக்காது என்பது தெளிவாய்த் தெரியுமளவுக்கு அவர்களின் ஆக்கினைத் தீர்ப்பிற்கான காரணம் இருக்க வேண்டும் (மத். 25:41; வெளி. 20:10).

## முடிவுரை

தேவனுடைய நீதிதான் அவர் "பூலோகத்தை நீதியாய் நியாயந் தீர்ப்பதற்கு" (அப். 17:31), மற்றும் அவர் தமது நியாயத்தீர்ப்பில் நீதியாய் இருப்பதற்கு (யோவா. 5:30) அவரைத் தூண்டுவதாக இருக்கும். நியாயத் தீர்ப்பு என்பது மிகவும் தீவிரமான விஷயமாக உள்ளது: " 'கர்த்தர்

*தம்முடைய ஜனங்களை நியாயந்தீர்ப்பார்'. ஜீவனுள்ள தேவனுடைய கைகளில் விழுகிறது பயங்கரமாயிருக்குமே" (எபி. 10:30, 31). தேவனுடைய சித்தத்திற்கு மனப்பூர்வமாய்க் கீழ்ப்படியாமல் இருப்பவர்களிடத்தில், "நியாயத்தீர்ப்பு வருமென்று பயத்தோடே எதிர்பார்க்குதலும், விரோதிகளைப் பட்சிக்கும் கோபாக்கினையுமே இருக்கும்" (எபி. 10:26, 27).*

*நாம் தேவனுக்குக் கீழ்ப்படிந்தால், அவரது அன்பு நமது இரட்சிப்பை நமக்கு அளிப்பதாக இருக்கும் (யோவா. 3:16). கிறிஸ்தவர்களாவதற்கான அவருடைய கட்டளைகள் பின்வருமாறு: நமது பாவங்களில் இருந்து மனந்திரும்புதல் (அப். 17:30, 31), இயேசுவை தேவனுடைய குமாரன் என்று அறிக்கையிடுதல் (ரோமர் 10:10), மற்றும் ஞானஸ்நானம் பெறுதல் (அப். 2:38; 22:16). பின்பு நாம் அவரது பிள்ளைகளாக வளர்ந்து பக்குவடைய வேண்டும் (1 பேது. 2:3). அந்த நாளுக்கென்று நாம் நம்மையே தயார் செய்து கொள்பவர்களாகவும், மற்றவர்களுக்குத் தேவனுடைய சித்தத்தைப் போதிப்பதன் மூலம் அவர்கள் தங்களைத் தயாரித்துக் கொள்ள உதவுகின்றவர்களாகவும் இருக்க வேண்டும்.*

---

*குறிப்புகள்*

*[1]"வேதனையுள்ள இடம்" என்ற வார்த்தையை நாம் பெற்றுக்கொள்கின்ற* tartaros *என்ற கிரேக்க வார்த்தை வேதாகமத்தில் 2 பேது. 2:4 வசனத்தில் மாத்திரம் ஒரே ஒருமுறை காணப்படுகிறது. இது "நரகம்" என்று மொழிபெயர்க்கப் பட்டிருப்பினும், இது மரித்தவர்கள் இருக்கும் இடமான பாதாளம் என்ற இடமாகவோ அல்லது நித்திய அக்கினியுள்ள இடமான* Gehenna *என்ற இடமாகவோ நினைத்துக் குழப்பம் அடைந்து விடக்கூடாது. இன்னும் அதிகமான தகவல்களுக்கு "மரித்தவர்களின் இடைப்பட்ட நிலை" என்ற பாடத்தில் காணவும். [2]தேவன் பின்வருபவர்களை நியாயந்தீர்த்தார்: ஆதாம் மற்றும் ஏவாள் (ஆதி. 3:19-23), காயீன் (ஆதி. 4:9-12), நோவா காலத்து உலகம் (ஆதி. 6:5-7), சோதோம் மற்றும் கொமோரா பட்டணங்கள் (ஆதி. 19:27-29), எகிப்து (யாத். 12:12), நாதாப் மற்றும் அபியூ (லேவி. 10:1-3), மிரியாம் மற்றும் ஆரோன் (எண். 12:1-15), கோரா (எண். 16:1-49), மோசே (எண். 20:10-12), ஊசா (2 சாமு. 6:6-8), தாவீது (2 சாமு. 12:1-14), இஸ்ரவேல் (2 இரா. 17:7-18) மற்றும் யூதா (2 நாளா. 36:15-21) இராஜ்யங்கள், மற்றும் பல மக்கள். [3]"கர்த்தருடைய" என்பது kuriakos என்ற கிரேக்க பெயர் உரிச்சொல்லாக உள்ளது, இது 1 கொரி. 11:20லும் பயன்படுத்தப்பட்டுள்ளது.* [4]H. Waterman, "The Lord's Day," *The Zondervan Pictorial Encyclopedia of the Bible,* vol. 3, ed. Merrill C. Tenny (Grand Rapids, Mich.: Zondervan, 1975), 965. W. E. Vine, Merrill F. Unger, and William White, Jr., "Day," *Vine's Complete Expository Dictionary of Old and New Testament Words* (Nashville: Thomas Nelson Publishers, 1985), 146. *[5]மத். 16:27; அப். 10:42; 17:31; 2 தீமோ. 4:1 ஆகிய வசனங்களைக் காணவும்.*